# ஏரெழுபது

## திருக்கைவழக்கம்

1201/2010
http://www.thamizham.net
FREE E-BOOKS (TAMIL)

ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலர்

விலை அணா 2¼

உ

கணபதி துணை.

மகாகவியாகிய கம்பர்

வேளாளர்மேற்பாடிய

# ஏரெழுபது,

# திருக்கைவழக்கம்.

இவ்விரண்டும்

யாழ்ப்பாணத்து நல்லூர்

ஆறுமுகநாவலரவர்கள்

சிதம்பர சைவப்பிரகாசவித்தியாசாலைத் தருமபரிபாலகர்

விசுவநாதபிள்ளையால்

சென்னபட்டணம்

வித்தியாநுபாலனயந்திரசாலையில்

அச்சிற்பதிப்பிக்கப்பட்டன.

ஆறம் பதிப்பு.

அக்ஷயவருஷம் பங்குனிமீ.

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

கணபதி துணை.

# ஏ ரெ ழு ப து.

## பா யி ர ம்.

### க ண ப தி.

கோச்சகக்கலிப்பா.

ஐங்கைபெறுங் காராளர் கருவியெழு பதுமுரைக்க
அங்கைபெறும் வளைத்தழும்பு முலைத்தழும்பு மணியமலை
மங்கைபெறுந் திருவுருவாய்வந்துறைந்தார் தமைவலஞ்செய்
கங்கைபெறுந் தடவிகடக் களிற்றனைக் கழல்பணிவாம். (௧)

திரிமூர்த்திகள்.

நிறைக்குரிய வந்தணர்க ணெறிபரவ மனுவிளங்கத்
தறைக்குரிய காராளர் தமதுவரம் பினிதோங்க
மறைக்குரிய பூமனையும் வண்டுளபத் தாமனையும்
பிறைக்குரிய நெடுஞ்சடிலப் பெம்மானை யும்பணிவாம். (௨)

நாமகள்.

திங்களின்மும் மாரிபெயச் செகத்திலுயிர் செழித்தோங்கக்
கங்கைகுலா திபர்வயலிற் கருவீறத் தொழுகுலத்தோர்
துங்கமக மனுநீதி துலங்கிடவை யம்படைத்த
பங்கயன்ற னாவிலுறை பாமடந்தை பதந்தொழுவாம். (௩)

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

## ஆசிரியவிருத்தம். சோழமண்டலச் சிறப்பு.

ஈழமண்டல முதலெனவுலகத் தெண்ணுமண்டலத் தெறி படைவேந்தர், தாழுமண்டலஞ்செம்பியன்மரபினோர் தாமெ லாம்பிறந் தினியபல்வளத்தின், வாழுமண்டலங் கனகமுட ணிகளும் வரம்பில்காவிரி குரம்பினிற்கொழிக்குஞ், சோழ மண்டல மிதற்கிணையாமெனச் சொல்லுமண்டலஞ் சொல்ல தற்கில்லையே. (௪)

## கோச்சகக்கலிப்பா. சோழராசன் சிறப்பு.

முடியுடைய மன்னவரின் மூவுலகும் படைத்துடைய
கொடியுடைய மன்னவரிற் குலவுமுதற் பெயருடையான்
இடியுடைய வொலிகெழுநீ ரெழுபத்தொன் பதுநாட்டுக்
குடியுடையான் சென்னிபிற ரென்னுடையார் கூறீரே. (௫)

## ஆசிரியவிருத்தம். மகாநாட்டுச் சிறப்பு.

மந்தரமனையதிண்டோண் மணிமுடிவளவன்சேரன்
சுந்தரபாண்டியன்றஞ் சுடர்மணிமகுடஞ்சூட
அந்தணர்குலமுமெல்லா வறங்களும்விளங்கவந்த
இந்திரனுலக்கம்போ லிருந்ததுபெரியநாடே. (௬)

## வேளாண்குடிச் சிறப்பு.

ஆழித்தேவர்கடலாளு ரல்லாத்தேவரம்பலத்தார்
ஊழித்தேவர்தாங்கூடி யுலகங்காக்கவல்லாரோ
வாழித்தேவர்திருமக்கள் வையம்புரக்கும்பெருக்காளர்
மேழித்தேவர்பெருமைக்கு வேறுந்தேவர்கூறேனே. (௭)

## கோச்சகக்கலிப்பா. வேளாளர் சிறப்பு.

தொழுங்குலத்திற் பிறந்தாலென் சுடர்முடி மன்னவராகி, எழுங்குலத்திற் பிறந்தாலென் னிவர்க்குப் பின்வணிகரே



னுஞ், செழுங்குலத்திற் பிறந்தாலென் சிறப்புடைய ராவ லென், உழுங்குலத்திற் பிறந்தாரே யுலகுய்யப் பிறந்தாரே.

## இதுவுமது.

அழுங்குழவிக் கன்புடைய தாயேபோ லனைத்துயிர்க்கும்
எழுங்கருணைப் பெருக்காள ரெளியரோ யாம்புகழ
உழுங்கொழுவிற் கருவீறி யுலகமுதற் கருவாகச்
செழுங்கமலத் தயனிவரைச் செய்துலகஞ் செய்வானேல். ()

## இதுவுமது.

வேதியர்த முயர்குலமும் விறல்வேந்தர் பெருங்குலமும்
நீதிவளம் படைத்துடைய நிதிவணிகர் தங்குலமுஞ்
சாதிவளம் படைத்துடைய தாமனைய காராளர்
கோதில்குலந் தனக்குநிக ருண்டாகிற் கூறீரே. (௧0)

பாயிரமுற்றிற்று.

## உழவுநாட்கோடச்சிறப்பு.

சீர்மங்க லம்பொழியுந் தெண்டிரைநீர்க் கடல்புடைசூழ்
பார்மங்க லம்பொழியும் பல்லுயிருஞ் செழித்தோங்கும்
கார்மங்க லம்பொழியும் பருவத்தே காராளர்
ஏர்மங்க லம்பொழிய வினிதுழநாட் கொண்டிடினே. (௧)

## உழவுச்சிறப்பு.

நீர்விழாக் கொளவளர்ந்த நிலமெல்லாந் தம்முடைய
சீர்விழாக் கொளவிளக்குந் திருவிழாப் பெருக்காளர்

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

ஏர்விழாக் கொளினன்றி யெறுழ்க்கரிதேர் மாப்படையாற்
போர்விழாக் கொளமாட்டார் போர்வேந்த ராஜரே. (௨)

**அலப்படைச்சிறப்பு.**

குடையாளு முடிவேந்தர் கொலையானை தேர்புரவி
படையாளு மிவைநான்கும் படைத்துடைய ராஜனென்
மடைவாளை வரும்பொன்னி வளநாடர் தங்கள்கலப்
படைவாளைக் கொண்டன்றிப் பகையறுக்க மாட்டாரே. (௩)

**மேழிச்சிறப்பு.**

வாழிநான் மறையோர்கள் வளர்க்கின்ற வேள்விகளும்
ஆழியா லுலகளிக்கு மடல்வேந்தர் பெருந்திருவும்
ஊழிபே ரினும்பெயரா வுரையுடைய பெருக்காளர்
மேழியால் விளைவதல்லால் வேறொன்றால் விளையாவே. (௪)

**ஊற்றாணிச்சிறப்பு.**

நீற்றோனு மலரோனு நெடியோனு மென்கின்ற
தோற்றுள ரிவராலே தொல்லுலக நிலைபெறுமோ
மாற்றாத காவேரி வளநாட ருழுங்கலப்பை
ஊற்றாணி யுளதாயி னுலகுநிலை குலையாதே. (௫)

**நுகத்தடிச்சிறப்பு.**

உரையேற்ற செங்கதிரோ னொளிநெடுந்தேர் பூண்டநுகந்
திரையேற்ற கடலுலகிற் செறியிருளை மாற்றுவது
விரையேற்ற விருநிலத்தோர் வெறுமையொடு வீழாமே
கரையேற்று நுகமன்றோ காராள ருழுநுகமே. (௬)

**நுகத்துளைச்சிறப்பு.**

வளைத்ததிரைக் கடல்சூழ்ந்த வையகத்தோ ரெல்லார்க்குந்
துளைத்ததுளைடசுப்டோன்னினணி கிடக்குந்துளைத்தல்லாற்



றிளைத்துவருஞ் செழும்பொன்னித் திருநாட ருழுநுகத்திற்
றுளைத்ததுளை போலுதவுந் துணையுளதோ சொல்லீரே. (௭)

**நுகத்தாணிச்சிறப்பு.**

ஓராணித்தேரினுக்கு முலகங்களனைத்தினுக்கும்
பேராணிப்பெருக்காளர் பெருமைக்குநிகருண்டோ
காராணிக்காவேரி வளநாடருழுநுகத்தின்
சீராணிக்கொப்பதொரு சிறந்தாணிசெப்பீரே. (௮)

**பூட்டாங்கயிற்றுச்சிறப்பு.**

நாட்டுகின்ற சோதிடத்தி னுண்பொருத்த நாட்பொருத்தங்
காட்டுகின்ற கயிறிரண்டுங் கயிறல்ல கடற்புவியிற்
றீட்டுபுகழ்ப் பெருக்காளர் செழுநுகத் தோடுழும்பகடு
பூட்டுகின்ற கயிறிரண்டும் புவிமகண்மங் கலக்கயிறே. (௯)

**தொடைச்சிறப்பு.**

தடுத்தநெடு வரையாலுந் தடவரைக ளெட்டாலும்
உடுத்ததிரைக் கடலாலு முலகினிலை வலியாமோ
எடுத்தபுகழ்ப் பெருக்காள ரெழுநுகத்தோ டிணைப்பகடு
தொடுத்ததொடை நெகிழாதே லுலகுதொடை நெகிழாதே.

**கொழுச்சிறப்பு.**

வேதநான்முதலாகி விளங்குகின்றகலையனைத்தும்
ஓதுவாரெல்லாரு முழுவார்தந்தலைக்கடைக்கே
கோதைவேன்மன்னவர்தங் குடைவளமுங்கொழுவளமே
ஆதலாலிவர்பெருமை யாருரைக்கவல்லாரே. (௧௧)

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

### கோழுவாணிச்சிறப்பு.

செழுவான மழைவாரி திங்கடொறும் பொழிந்தாலுங்
கெழுவார நிலமடந்தை கீழ்நீர்கொண் டெழுந்தாலும்
வழுவாத காவேரி வளநாட ருழுகலப்பைக்
கொழுவாணி கொண்டன்றிக் குவலயஞ்சீர் நிரம்பாதே. ()

### தாற்றுக்கோற்சிறப்பு.

வெங்கோபக் கலிகடந்த வேளாளர் விளைவயலுட்
பைங்கோல முடிதிருந்தப் பார்வேந்தர் முடிதிருந்தும்
பொங்கோதைக் கடற்றானைப் போர்வேந்தர் நடத்துபெருஞ்
செங்கோலை நடத்துங்கோ லேரடிக்குஞ் சிறுகோலே. (௧௩)

### உழவெருதின்சிறப்பு.

வானமழைபொழிந்தாலும் வளம்படுவதெவராலே
ஞானமறையவர்வேள்வி நலம்பெறுவதெவராலே
சேனைகொடுபொருமன்னர் செருக்களத்திற்செகுக்குமத
யானைவலியெவராலே யிவரெருத்தின்வலியாலே. (௧௪)

### அதன்சுவற்கறைச் சிறப்பு.

கண்ணுதலோன் றனதுதிருக் கண்டத்திற் படிந்தகறை
விண்ணவரை யமுதூட்டி விளங்குகின்ற கறையென்பார்
மண்ணவரை யமுதூட்டி வானுலகங் காப்பதுவும்
எண்ணருஞ் சீர்ப்பெருக்காள ரெருதுசுவலிடு கறையே. ()

### பகடுபூட்டற்சிறப்பு.

ஊட்டுவார்பிறருளரோ வுலகுதனி லுழுபகடு
பூட்டுவார்புகழன்றிப் பிறர்புகழும்புகழாமோ



நாட்டுவார்சயத்துவச நயப்பாரையிவர்க்குநிகர்
காட்டுவார்யார்கொலிந்தக் கடல்சூழ்ந்தவையகத்தே. (௧௫)

### ஏர்பூட்டற்சிறப்பு.

பார்பூட்டுந் திசையனைத்தும் பகடுகளும் பரம்பூண
போர்பூட்டுங் காமனுந்தன் பொருசிலைமேற் சரம்பூட்டான்
கார்பூட்டுங் கொடைத் தடக்கைக் காவேரிவளநாடர்
ஏர்பூட்டி னல்லதுமற் றிரவியுந்தேர் பூட்டானே. (௧௭)

### ஏர்நடத்தற்சிறப்பு.

கார்நடக்கும்படிநடக்குங் காராளர்தம்முடைய
ஏர்நடக்குமெனிற்புகழ்சா லியலிசைநாடகநடக்குஞ்
சீர்நடக்குந்திறநடக்குந் திருவறத்தின்செயனடக்கும்
பார்நடக்கும்படைநடக்கும் பசிநடக்கமாட்டாதே. (௧௮)

### உழுநர்சிறப்பு.

உழுதுண்டுவாழ்வாரே வாழ்வார்மற்றெல்லாருந்
தொழுதுண்டுபின்செல்வா ரென்றேயித்தொல்லுலகில்
எழுதுண்டமறையன்றோ விவருடனேயியலுமிது
பழுதுண்டோகடல்சூழ்ந்த பாரிடத்திற்பிறந்தோர்க்கே. ()

### உழவின்சிறப்பு.

அலகிலாமறைவிளங்கு மந்தணராகுதிவிளங்கும்
பலகலையாந்தொகைவிளங்கும் பாவலர்தம்பாவிளங்கு
மலர்குலாந்திருவிளங்கு மழைவிளங்குமனுவிளங்கும்
உலகெலாமொலிவிளங்கு முழவருழுமுழவாலே. (௨௦)

### படைச்சாலின்சிறப்பு.

பழுதுசால் வகையறியாப் பழமறையோர் பெருவேள்விக்
குழுதுசால் வதுகலப்பை யுயர்வான தென்றக்கால்

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

எழுதுசால் பெருங்கீர்த்தி யோராலும் பெருக்காளர்
உழுதசால் வழியன்றி யுலகுவழி யறியாதே. (௨௧)

### மண்வெட்டிச்சிறப்பு.

மட்டிருக்குந்திருமாது மகிழ்ந்திருக்கும்பூமாது
முட்டிருக்குஞ்செயமாது முன்னிருப்பார்முதுநிலத்து
விட்டிருக்குங்கலிதொலைத்து வேளாளர்தடக்கையினிற்
கொட்டிருக்கவொருநாளுங் குறையிருக்கமாட்டாதே. ()

### வரம்புகோலுதற்சிறப்பு

மெய்வரம்பாநிற்கின்ற வேதநூனெறிவரம்பாம்
இவ்வரம்புமவ்வரம்பு மிப்புவிக்குவரம்பாமோ
பொய்வரம்புதவிர்த்தருளும் புவிமடந்தைதிருமைந்தர்
செய்வரம்புதிருத்தாரேற் றிசைவரம்புதிருந்தாதே. (௨௫)

### ஏருக்கூடைச்சிறப்பு.

அடுத்திறக்கிப் பெருங்கூடை யளவுபடவேபெருவை
எடுத்திறக்கித் தலைமேலே கொண்டவர்தா மிடையிடையே
கொடுத்திறக்கி நிலமகளைக் கும்பிட்டு வணங்காரேற்
படுத்திறக்கித் திரிவார்தம் பழிமறுக்க மாட்டாரே. (௨௪)

### சேறுசெய்தற்சிறப்பு.

வெறுப்பதெல்லாம் பொய்யினையே வேளாளர் மெய்யாக
ஒறுப்பதெல்லாங் கலியினையே யுள்ளத்தால் வெள்ளத்தாற்
செறுப்பதெல்லாம் புல்லினையே செய்யின்வள மறிந்தறிந்து
மறிப்பதெல்லாஞ்சேற்றினையேவளம்படுதற்பொருட்டாயே.



### பரம்படித்தற்சிறப்பு.

வரம்படிக்கமலர்பரப்பி வயலடிக்கவரம்புதொறுங்
குரம்படிக்கமணிகொழிக்குங் குலப்பொன்னித்திருநாடர்
பரம்படிக்கவுடைந்தளைந்த பழனச்சேற்றுரமன்றி
உரம்படிப்பப்பிறிதுண்டோ வுண்டாயினுரையீரே. (௨௬)

### வித்துவிளைத்தற்சிறப்பு.

பத்திவிளைத்திடுந்தெய்வம் பணிவார்க்குந்தற்பரமா
முத்திவிளைத்திடுஞான முதல்வருக்குமின்னமுதம்
வைத்துவிளைத்திடுவார்க்கும் வல்லவர்க்கும்பெருக்காளர்
வித்துவிளைத்திடிலன்றி வேண்டுவனவிளையாவே. (௨௭)

### முளையின்சிறப்பு.

திறைமயங்கா தருள்விளங்குஞ் செயன்மயங்காத் திறல் வேந்தர், நிறைமயங்கா வணிகேசர் நிலைமயங்கா வந்தணர்கண், மறைமயங்கா தொருநாளு மனுமயங்கா துலகத்தின், முறைமயங்கா தவர்வயலின் முளைமயங் காத்திறத்தாலே.

### நாற்றங்காற்சிறப்பு.

ஏறுவளர்த்திடுமுகிலு மிசைவளர்க்குமெனவுரைப்பின்
ஆறுவளர்த்திடுவதுசென் றலைகடலைத்தானன்றோ
வேறுவளர்ப்பனகிடப்ப வேளாளர்விளைவயலின்
நாறுவளர்த்திடிலன்றி ஞாலமுயிர்வளராதே. (௨௯)

### நாறுபறித்தற்சிறப்பு.

வெறுத்துமீன்சனிபுகிலென்வெள்ளிதெற்கேயாயிடிலென்
குறித்தநாள்வரம்பழியாக்குலப்பொன்னித்திருநாடர்

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

மறித்துநாட்டிடநின்றவளவயலினிடைநாற்றைப்
பறித்துநாட்கொண்டதற்பின்பார்பசிக்கமாட்டாதே. (௩0)

**நாற்றுமுடிசுமத்தற்சிறப்பு.**

மாணிக்கமுதலாய மணியழுத்தித்தொழில்சமைத்த
ஆணிப்பொன்முடிவேந்த ரணிமுடியுமுடியாமோ
பேணிப்பைங்கோலமுடி பெருக்காளர்சுமவாரேற்
சேணுக்குந்திசைபுறத்துஞ் செங்கோன்மைசெல்லாதே. ()

**வயலின்முடிசேர்த்தற்சிறப்பு.**

தென்னன்முடி சேரன்முடி தேங்குபொன்னி நாடன்முடி
கன்னன்முடி கடல்சூழ்ந்த காசினியோர் தங்கண்முடி
இன்னமுடி யன்றியுமற் றெடுத்துரைத்த முடிகளெல்லா
மன்னுமுடி வேளாளர் வயலின்முடி கொண்டன்றே. (௩௨)

**முடிவிளம்புதற்சிறப்பு.**

வெய்யகலி வலிதொலைக்கும் வேளாளர் விளைவயலிற்
செய்யின்முடி விளம்பாரேல் விளம்புவன சிலவுளவோ
மையறுமந் தணர்விளம்பார் மறைமனுமன் னவர்விளம்பார்
ஐயமறு புலவோரு மருந்தமிழ்நூல் விளம்பாரே. (௩௩)

**கைப்பாங்கின்சிறப்பு.**

மெய்ப்பாங்கு படக்கிடந்த வேதநூல் கற்றாலென்
பொய்ப்பாங்கு படப்பிறரைப் புகழுநூல் கற்றாலென்
செய்ப்பாங்கு படக்கிடந்த செழுஞ்சாலி நன்னாற்றைக்
கைப்பாங்கு பகுந்துநடக் கற்றாரே கற்றாரே. (௩௪)

**நடவுழவைச்சிறப்பு.**

உலகத்திற்பகடுழக்கு மோங்குமுடித்திறல்வேந்தர்
அலறத்திண்பகடுழக்குமொருதுமவுழவையாமோ



உலகத்திற்பகடுழக்கு முயர்முடிகொள்வேளாளர்
சிலவருழச்சிலவர்நடு மவையன்றோதிருமுழவையே. (௩௫)

**பயிர்விளைத்தற்சிறப்பு.**

ஏராலேசேறுக்கி யெருவாலேகருவாக்கி
நீராலேபைங்கூழை நிலைப்பிப்பார்தமையன்றிக்
காராலேகாவேரி நதியாலேகாசினியில்
ஆராலேபசிதீர்வா ரகலிடத்திற்பிறந்தோரே. (௩௬)

**பயிர்முதற்சிறப்பு.**

அந்தணர்க்குவேதமுத லரசருக்குவெற்றிமுதல்
முந்தியசீர்வணிகருக்கு முதலாயமுதலுலகில்
வந்தவுயிர்தமக்கெல்லா மருந்தாகவைத்தமுதல்
செந்தமிழ்க்குமுதலாய திருவாளர்செய்முதலே. (௩௭)

**பயிர்வளர்தற்சிறப்பு.**

சீர்வளருமறைவளருந் திறல்வேந்தர்முடிவளரும்
பேர்வளரும்வணிகருக்குப் பெருநிதியமிகவளரும்
ஏர்வளருந்திருவளரு மிசைவளருங்கடல்சூழ்ந்த
பார்வளருங்காராளர் பயிர்வளருந்திறத்தாலே. (௩௮)

**ஏற்றத்தின்சிறப்பு.**

காற்றுமேல்வருகின்ற கார்விடினுங்கடல்சுவறி
யாற்றுநீரறவெள்ளி யரசனுந்தெற்காயிடினும்
ஏற்றமேகொடுநாளு மிறைத்துலகம்விளைவித்துக்
காத்துமேயுயிர்வளர்த்தல் காராளர்தங்கடனே. (௩௯)

**துலைநீரின்சிறப்பு.**

கலையிட்டமறைவேந்தர் கனல்வேள்விவளர்ப்பதுவும்
மலையிட்டபுயத்தரசர் மணிமகுடஞ்சூட்டுவதுந்

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

தலையிட்டவணிகருயத் தனமீட்டப்படுவதுவு
நிலையிட்டவேளாளர் துலையிட்டநீராலே. (௪0)

**கரம்புதிருத்தற்சிறப்பு.**

மேடுவெட்டிவளப்படுத்தி மிகவரம்புநிலைநிறுத்திக்
காடுவெட்டியுலகநெறிக் காராளர்காத்திலரேல்
மேடுவெட்டிக்குறும்பறுக்கும் வேல்வேந்தரெற்றாலுங்
காடுவெட்டியுழுதுவரும் கலிகளையமாட்டாரே. (௪௧)

**புழுதிச்சிறப்பு.**

எழுதொணா மறைவிளங்கு மியலிசைநா டகம்விளங்கும்
பழுதிலா வறம்விளங்கும் பார்வேந்தர் முடிவிளங்கும்
உழுதுசால் பலபோக்கி யுழவருழக் கியவெங்காற்
புழுதியால் விளையாத பொருளுளவோ புகலீரே. (௪௨)

**பைங்கூழ்ச்சிறப்பு.**

கெட்டாரைத்தாங்குதலாற்கேடுபடாத்தொழிற்குலத்தோர்
ஒட்டாரென்றொருவகையும்வரையாதவுயர்நலத்தோர்
பட்டாங்குபகர்ந்தோர்க்கும்பசியகலப்பைங்கூழை
நட்டாரேவையமெல்லாநலந்திகழநட்டாரே. (௪௩)

**பயிர்க்குத்தண்ணீர்பாய்த்துதற்சிறப்பு.**

கார்தாங்குங் காவேரி நதிதாங்குங் காராளர்
ஏர்தாங்கு வாரன்றி யாவரே தாங்கவல்லார்
பார்தாங்கு மன்னுயிரின் பசிதாங்கும் பைங்கூழின்
நீர்தாங்கு வாரலரோ நிலந்தாங்கு கின்றாரே. (௪௪)

**களைகளைதற்சிறப்பு.**

வளைகளையு மணிகளையு மலர்களையும் வரும்பலவின்
சுளைகளையுங் கொடுகரைக்கே சொரிபொன்னித் திருநாடர்



விளைகளையுண் செஞ்சாலி வேரூன்றிக் கோடுகொள்ளக்
களைகளையா விடில்வேந்தர் கலிகளைய மாட்டாரே. (௪௫)

**கருப்பிடித்தற்சிறப்பு.**

திருவடையுந் திறலடையுஞ் சீரடையுஞ் செறிவடையும்
உருவடையு முயர்வடையு முலகெலா முயர்ந்தோங்குந்
தருவடையுங் கொடையாளர் தண்வயலிற் செஞ்சாலி
கருவடையிற் பூதலத்திற் கலியடைய மாட்டாதே. (௪௬)

**ஈற்றேறுஞ்சிறப்பு.**

ஏற்றேறு மரன்சிறப்புக் கெழிலேறு மகத்தழல்கள்
மாற்றேறு மரசர்முடி வளர்ந்தேறும் வளமைமிகும்
ஊற்றேறுங் குலப்பொன்னி யுறைநாட ரிடுஞ்சாலி
ஈற்றேறும் போதுகலி யீடேற மாட்டாதே. (௪௭)

**பசுங்கதிர்ச்சிறப்பு.**

முதிராத பருவத்து முற்றியநற் பருவத்துங்
கதிராகி யுயிர்வளர்ப்ப திவர்வளர்க்குங் கதிரன்றே
எதிராக வருகின்ற வெரிகதிருங் குளிர்கதிருங்
கதிராகி யுயிர்வளர்ப்ப துண்டாயிற் காட்டீரே. (௪௮)

**நெற்றலைவளைதற்சிறப்பு.**

அலைவளையும் புவிவேந்த ரங்கையிற்றங் கியவீரச்
சிலைவளையு மதன்கருப்புச் சிலைவளையுங் கொடுங்கலியின்
தலைவளையுங் காராளர் தண்வயலிற் செஞ்சாலிக்
குலைவளையும் பொழுதினிற்செங் கோல்வளைய மாட்டாதே.

**சேவல்காத்தற்சிறப்பு.**

அறங்காணும் புகழ்காணு மருமறையி னாகமத்தின்
திறங்காணுஞ் செயங்காணுந் திருவளர்க்கு நிதிகாணும்

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

மறங்காணும் கருங்கலியின் வலிதொலைத்த காராளர்
புறங்காணுஞ் சோறிட்டுப் புறங்காணப் புகுந்திடினே. (ருo)

**அரிகதிர்வழங்குஞ்சிறப்பு.**

அரிவுண்ட பொற்கதிரை நெற்கதிர்நே ராதுலர்க்குப்
பரிவுண்ட பெருவார்த்தை புதிதன்று பழைமைத்தே
விரிவுண்ட கடற்படியு மேகங்கண் மறுத்தாலுந்
திரிவுண்டோ காராளர் செயலினுக்குச் செப்பீரே. (ருக)

**அரிசூட்டின்சிறப்பு.**

கோடுவரம் பிடையுலவுங் குலப்பொன்னித் திருநாடர்
நீடுபெரும் புகழ்வளரு நிலமடந்தை திருமக்கள்
பீடுவரம் பிடைவயலிற் பிறைவாளிற் கடிகின்ற
சூடுவரம் பேறுதேற் சுருதிவரம் பேறுதே. (ருஉ)

**களஞ்செய்தற்சிறப்பு.**

சீரான விறல்வேந்தர் செருவிளைத்துச் செல்லுவதும்
பேரான மனுநீதி பிறழாது விளங்குவதும்
நீராலே செஞ்சாலி விளைவித்து நெறிநடத்துங்
காராளர் விளைவயலிற் களம்பண்ணும் பொருட்டாலே. ()

**படுசூட்டின்சிறப்பு.**

கடிசூட்டு மலர்வாளிக் காமனடல் சூடுவதுங்
கொடிசூட்டு மணிமாடக் கோபுரம்பொன் சூடுவதும்
முடிசூட்டி வயவேந்தர் மூவுலகு மிறைஞ்சுபுகழ்
படிசூட்டி யிருப்பதெல்லாம் படுசூட்டின் வலியாலே. (ருச)

**அரிமிதிகோலின்சிறப்பு.**

முருட்டின்மிகு வெம்பகைவர் முரண்கெடுத்திவ் வுலக மெல்லாந், தெருட்டிநெறிசெல்கின்றசெங்கோன்மை செலுத்துங்கோல், வெருட்டின்மிகுங் கருங்கலியைவேரோடுமகற் றுங்கோல், சுருட்டிமிகத் தடிந்துசெந்நெற் சூடுமிதித் திடுங் கோலே. (ருரு)



**போர்செய்தற்சிறப்பு.**

காராளுங் கரியினமும் பரியினமுங் கைவகுத்துப்
போராளு முடிவேந்தர் போர்க்கோல மெந்நாளுஞ்
சீராளுஞ் செழும்பொன்னித் திருநாடர் புகழ்விளக்கும்
ஏராளுங் காராள ரிவர்செய்யும் போராலே. (ருசு)

**போர்க்களம்பாடுதற்சிறப்பு.**

வளம்பாடுங் குடைமன்னர் மதயானை படப்பொருத
களம்பாடும் பெருஞ்செல்வங் காசினியிற் சிறந்தன்று
தளம்பாடுந் தாரகலத் தாடாளர் தம்முடைய
களம்பாடும் பெருஞ்செல்வங் காசினியிற் சிறந்ததே. (ருஎ)

**போர்க்களச்சிறப்பு.**

பார்வேந்தர் பெருஞ்செல்வம் பழுதுபடா தொருநாளும்
ஏர்வேந்தர் பெருஞ்செல்வ மழிவுபடா திருத்தலினாற்
றேர்வேந்தர் போர்க்களத்துச் சிலர்வெல்வர் சிலர்தோற்பர்
ஏர்வேந்தர் போர்க்களத்து ளிரப்பவருந் தோலாரே. (ருஅ)

**போர்செய்வோர்நெல்லளவோரை விளித்தற்சிறப்பு.**

நாவலோ நாவலென நாடறிய முறையிட்ட
ஏவலோர் போர்க்களத்தி லெதிர்நிற்பர் முத்தமிழ்தேர்
பாவலோ ரிசைவல்லோர் பற்றுடைய பதினெண்மர்
காவலோ ரெல்லாருங் கையேற்கும் பொருட்டாலே. (ருகூ)

**போர்படுத்தற்சிறப்பு.**

எடுத்தபோர்க் களத்தரச ரிணைப்பகடு சிலநடத்திப்
படுத்தபோர் பயந்ததனாற் பார்தாங்கி வாழ்வதெல்லாம்



FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

எடுத்தபோ ருழவெரு மிணைப்பகடு செலநடத்திப்
படுத்தபோர் வையகத்தில் விளங்குகின்ற பயனுலே. (௬௦)

## நெற்பொலிச்சிறப்பு.

விற்பொலியும் பெருங்கீர்த்தி வேளாளர் விளைவயலில், நெற்பொலியுண் டாமாகி னிலமகளும் பொலிவுண்டாம், பொற்பொலி வுண்டாமுலகம் புகழ்ப்பொலி வுண்டாம்புலவோர், சொற்பொலிவுண் டாங்கலியின் றுயர்பொலிய மாட்டாதே.

## நெற்றூவித்தற்சிறப்பு.

தன்னிகரொன் றுவ்வாத தலம்வளர்க்கும் பெருக்காளர், மன்னுபெருங் களத்தினிடை மாருதத்திற் றூற்றியிடுஞ், செந்நெல்லைப் பொலிவாலே செம்பொன்மலை யெனக்குவித்தே, அந்நெல்லின் பொலியாலே யவனியுயிர் வளர்ப்பாரே.

## கூடைச்சிறப்பு.

ஆடையா பரணங்க ளணிந்துமுடி சுமந்திடலும்
ஓடையா னையினெருத்த முயர்ந்துலகந் தாங்குதலும்
பேடையோ டனநீங்காப் பெருங்கழனிப் பெருக்காளர்
கூடையா னதுகையிற் கொண்டுகளம் புகுந்திடினே. (௬௩)

## பொலிதூற்றுங்கூடைச்சிறப்பு.

வலியாற்று மன்னவர்க்குந் தேவருக்கு மறையவர்க்கும்
ஒலியாற்றும் பேருலகி லுய்யவமு திடுங்கூடை
கலிமாற்றி நயந்தபுகழ்க் காராளர் தம்முடைய
பொலிதூற்றுங் கூடைக்குப் போதுவதோ புகலீரே. (௬௪)

## பொலிகோலின்சிறப்பு.

சீற்றங்கொள் கருங்கலியைச் செறுக்குங்கோல் செகதலத்துக்
கூற்றங்கொண் மனுநெறியை யுண்டாக்கி வளர்க்குங்கோல்
ஏற்றங்கொள் வபவேந்தர்க் கெப்பொருளுங் கொடுத்துலகம்
போற்றுஞ்சொற் பெருக்காளர் பூங்கையினிற் பொலிகோலே.

## விரைக்கோட்டைச்சிறப்பு.

திருத்தோட்டுப் பிரமாவாற் செனிக்கின்ற வுயிர்களுக்கும், உருத்தோட்டும் புகழுக்குமுரிமைமுறை வளர்க்கின்ற, வரைக்கோட்டுத் திணிபுயத்து வளர்பொன்னித் திருநாடர், விரைக்கோட்டை கொண்டன்றோ வேந்தரிடுங் கோட்டைகளே.

## கல்லறைச்சிறப்பு.

தளர்ந்தவுயி ரித்தனைக்குந் தாளாள ரெண்டிசையும்
வளர்ந்தபுகழ்ப் பெருக்காளர் வளமையா ருரைப்பாரே
அளந்துலக மனைத்தாளு மரசர்வே தியர்புலவர்
களந்துவைக்க வையுகுத்த கல்லறைக ளுண்பாரேல். (௬௭)

## மெய்ப்பேறு.

அரியாதனத்தின் மேலிருந்தே யம்பொற் குடைக்கீழரசியற்றும், பெரியார்பக்கல் பெறும்பேறும் பேறேபல்ல பெருக்காளர், சொரியாநிற்பச் சிலர் முகந்து தூற்றாநிற்பச் சிலரளந்து, புரியாநிற்பப் பெறும்பேறுக்கது நேரொக்கப்போதாதே.

## வாழ்த்து.

பார்வாழி நான்மறைநூற் பருணிதரா குதிவாழி
கார்வாழி வளவர்பிரான் காவேரி நதிவாழி
பேர்வாழி பெருக்காளர் பெருஞ்செல்வக் கிளைவாழி
ஏர்வாழி யிசைவாழி யெழுபத்தொன் பதுநாடே. (௬௮)

ஏரெழுபது முற்றிற்று.



FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

உ

கணபதி துணை.

# திருக்கைவழக்கம்.

கங்கைகுலந்தழைக்கக் காட்டும்பெருங்கீர்த்தி
மங்கைபிரியாமல் வாழுங்கை—திங்களணி
எம்பிரானெம்பெருமா னிந்த்ராதிபர்க்கரிய
தம்பிரானுக்குரைத்த சந்தனக்கை—யம்பொன்
வளைவாரிவையகமும் வானகமும்போற்ற
முளைவாரிவந்த முழுக்கை—கிளைவாழக்
கச்சித்தலத்தரனைக் கல்லாலெறியமறந்
தெச்சிற்றயிர்ச்சோ றெறிந்திடுங்கை—பச்சைமிகு
தேமாவடுக்கமரிற் சித்தித்தென்றேகழுத்தை
யாமாமெனவே யரிந்திடுங்கை—வாமமறை
ஓதுபுகழ்நாயனுட னூரன்புறமென்றே
மோதுதடிகொண்டு முடிக்குங்கை—நீதகல
அஞ்செழுத்தேயொன்றுகி யப்பரெனத்தோன்றியரன்
செஞ்சரணத்தேபூசை செய்யுங்கை—வஞ்சியர்பாற்
றாதரனைத்தான்விடுத்த சுந்தரனைக்காணுமற்
பேதமறத்தன்வயிறு பீறுங்கை—பூதத்தின்
மிக்கபுலவனுக்கா வேசிமனைமட்டாகத்
தக்கசிவிகைதனை தாங்குங்கை—மைக்கடுவாய்
மூக்கிற்புகைபுரிந்த மூதரவின்வாயிடத்து
நீக்கியகைநாக்கதனி னீட்டுங்கை—யாக்கமுடன்



ஏதமற்றகீர்த்தியைக்கொண் டேட்டகத்திலேயடிமைச்
சாதனமிட்டேகொடுத்த தங்கக்கை—மேதினியிற்
சூலிமுதுகிற் சுடச்சுடவப்போதுசமை
பாலடிசிறன்னைப் படைக்குங்கை—சாலவே
நாணந்தராம னடுங்காமற்கூசாமற்
பாணன்பிணத்தைப் பரிக்குங்கை—காணவே
தண்டமிழோன்றன்மனத்திற் சந்தேகந்தீரக்கூழ்
உண்டவயிற்றைப்பீறி யூற்றுங்கை—கண்டளவில்
நீலிதனக்கஞ்சி நின்றவணிகேசனுக்காக்
கோலியபயங் கொடுக்குங்கை—யாலமெனும்
வன்னியிடைமூழ்கி வானோர்பழிகழுவிக்
கன்னிதனையேமணந்த காட்சிக்கை—துன்னுமொரு
பேருலகையெல்லாம் பிழைப்பிக்குமோர்கொழுவின்
கூறிலொருவன்கழுத்தைக் குத்துங்கை—பாரறிய
வீறுபெறும்பறையன் வியாமலோர்கலத்திற்
சோறுபிசைந்துண்ட சுடர்மணிக்கை—யாருத்
தொடையிலெழுசிலந்தி தோற்றுவிக்கப்பட்டின்
புடைவைகிழித்த பெருங்கை—கடல்சூழ்ந்த
பார்பூட்டுமன்னர் பரிகரிபூட்டக்கதிரோன்
றேர்பூட்டவேர்பூட்டுஞ் செம்பொற்கை—வீரமதன்
ஐங்கோலொடுக்க வணைகோலெடுக்கவுழும்
பைங்கோல்பிடிக்கும் பதுமக்கை—பிங்கிதமாஞ்
சீர்படைத்தபூபாலர் செங்கோல்பிடிப்பதற்குப்
பேர்படைத்தமேழி பிடிக்குங்கை—கார்படைத்த
மிஞ்சுமதிகீர்த்தியைப்போன் மேதினியெல்லாந்தழைக்கச்
செஞ்சாலிநாற்றைத் தெளிக்குங்கை—யெஞ்சாமல்
வெள்ளைக்களைகளைந்து வீறும்பயிர்தழைக்கக்

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

கள்ளக்களைகளைந்த கற்பகக்கை—வள்ளுறையும்
விற்போர்மதகரிப்போர் வெம்பரிப்போர்வெற்றிப்போர்
நெற்போர்முதற்போர் நெரித்திடுங்கை—கற்பகம்போன்
மேழிக்கொடிசிங்க வெற்றிக்கொடிகுயிலின்
வாழிக்கொடியே மருவுங்கை—நீளுலகில்
ஆதுலர்க்குச்செம்பொ னளிக்குங்கையாகமங்கள்
வேதபுராணங்கள் விரிக்குங்கை—நீதிநெறி
மானங்குலங்கல்வி வண்மையறிவுடைமை
தானந்தருமந் தழைக்குங்கை—யானதமிழ்
கல்லார்களென்னாமற் கற்றோர்களென்னாமல்
எல்லாரையுங்காத்தீ டேற்றுங்கை—வல்லமைசேர்
மைம்மாமுகிலுலகை வாழ்விக்குமேன்மைபோற்
கைம்மாறிலாதளித்த கற்பகக்கை—சும்மையார்
ஊருணிநீர்போ லுலகத்தவர்க்கெல்லாம்
பேரறிவாளியும் ப்ரதாபக்கை —பாரில்
உடுக்கையிழந்தவன் கைபோலவாங்கே
கொடுக்கவிசைந்த குளிர்க்கை—யிடுக்கணினான்
மாமறையோர்மன்னர் வணிகர்முதலாகத்
தாமலையாமற்கொடுத்துத் தாங்குங்கை—தேமருவு
நாவிற்புகழ்கம்ப நாடற்கடிமையென்றே
மாவைக்கரைத்துமுன்னே வைக்குங்கை—பாவலர்தாம்
ஏரெழுபதோதியரங் கேற்றுங்களரியிலே
காரிவிடநாகங் கடிக்குங்கை—பாரறியச்
சங்கையிட்டுத்தள்ளாமற் றன்சோற்றைவந்தவர்க்குப்
பங்கையிட்டிரட்சித்த பங்கயங்கை—பொங்கமொடு
செம்பொன்விளைகளத்தூர் செந்நெல்விளைந்ததனை
நம்பிமறையோர்க்களித்த நாணயக்கை—யம்பொன்



விளைபயிரைப்பார்த்து விரைகால்புலத்தை
வளையமதிலிட்டு வருங்கை—களமதனில்
ஏற்கவந்தவாதுலருக் கில்லையென்னாமற்செம்பொன்
கார்க்கையினான்முக்கையிட்ட கற்பகக்கை —தீர்க்கமதாத்
திருப்பருத்திக்குன்றிற் சிவனாலயங்கள்
விருப்புடனேகட்டுவித்து வீறுங்கை—திருப்புகழை
எண்ணையெழுத்தை யிசையையிலக்கணத்தை
வண்மைபெறவுண்டாக்கும் வாகுளகை—பண்ணமைந்த
வேதமொருநான்கினையு மிக்கதமிழ்நாலடியால்
ஓதியுரைத்தேகருணை யோங்குங்கை—பூதலத்திற்
பாவலனெச்சிற் படுமாங்கனியையெடுத்
தாவலுடனன்று வருந்துங்கை—காவலவன்
மண்ணிற்கடலின் மலையிற்பெரியதென
எண்ணியெழுதிக்கொடுத்த வேற்றக்கை—திண்ணமதாய்
வையகமெங்குந்தேடி வந்ததமிழோன்புகழச்
செய்யமுடியைக்கொடுத்த செம்பொற்கை—துய்யபுகழ்
அட்டதிக்குமெண்கீர்த்தி யாயிரத்தெட்டானைதனை
வெட்டிப்பரணிகொண்ட வீரக்கை—திட்டமுடன்
பொன்னாலமுதும் பொரிக்கறியுந்தான்கொணர்ந்து
நன்னாவலர்க்களித்த நாணயக்கை—முன்னாள்
மனக்கவலையுற்ற வணிகன்முன்னேநின்று
தனைக்காவெனக்கேட்ட தங்கக்கை—களக்கவே
அன்றீன்றநாகெழுப தானவெருமைத்திறத்தைக்
கன்றோடுநல்குங் கடகக்கை—வென்றிதரும்
ஓரானைநூறு யிரக்கலநெல்லோர்கவிக்குச்
சீராகநல்குந் தியாகக்கை—பேரியலைச்
சாற்றுமொட்டக்கூத்தன் சரசகவிசொல்லப்பா

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

லாற்றுநீர்காற்கொணர்ந்த வாண்மைக்கை—நேத்திபெற
வண்டமிழோன்றானுதைத்த வாகுளகாலுக்குப்பொன்
வெண்டயமிட்டேவணங்கும் வெற்றிக்கை—புண்டரிகக்
கையாற்புலவன் கனகமுடிமேற்குட்டச்
செய்யாழிபண்ணியிட்ட தீரக்கை—நொய்ய
எறும்புக்குமாஸ்பதந்தா னில்லையென்றமட்டிற்
றிறம்புக்கயானைதருஞ் செங்கை—பறம்புதனில்
எண்ணாயிரமுனிவர்க் கேற்றபடியப்படியே
பண்ணாக்கொடுக்கும் பராக்ரமக்கை—விண்ணாடர்
கூத்தபுகழண்ட கோளமளவும்படர
நாற்றிக்குமேருவினி னாட்டுங்கை—சீர்க்குகனை
ஆதாரமானவனை யைங்கரனைச்சங்கரனைப்
பாதாரவிந்தம் பணியுங்கை—நீதி
நடக்கையிருக்கை நகைக்கைமிடிதீர்க்கை
கொடுக்கைசெழுங்கை குளிர்க்கை—தொடுத்ததெல்லாஞ்
சீராகவுண்டாக்குஞ் செங்கைப்பெருங்கருணைக்
காராளர்கற்பகப்பூங் கை.

திருக்கைவழக்கம் முற்றுப்பெற்றது.

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010

# பிரகடன பத்திரம்

| | ரூ. | அ. |
| --- | --- | --- |
| கந்தபுராண வசனம் ஆப்பவுண்டு | 5 | 0 |
| டெ கலிகோ | 5 | 8 |
| திருவள்ளுவர் பரிமேலழகருரை | 5 | 0 |
| நன்னூற்காண்டிகையுரை ஆப்பவுண்டு | 3 | 12 |
| டெ கலிகோ | 4 | 0 |
| நன்னூல் விருத்தியுரை | 3 | 8 |
| திருக்கோவையாருரை | 3 | 0 |
| அருட்பா—இது அகத்தியர் தேவாரத்திரட்டும் திருவாசகமும் திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் பெரியபுராணச் செய்யுட்டிரட்டும் அடங்கியது. | 1 | 12 |
| இலக்கணக்கொத்துரை, தொல்காப்பியச் சூத்திர விருத்தி, இலக்கணவிளக்கச் சூறாவளி | 2 | 0 |
| சைவசமயநெறியுரை | 1 | 4 |
| திருவாசகம்—(மாணிக்கவாசகர் சரித்திரத்துடன்) | 0 | 8 |
| கொலைமறுத்தலாதி—இது கொலைமறுத்தல், வைராக்கிய சதகம், வைராக்கிய தீபம், அவிரோதவுந்தியார் அடங்கியது. | 1 | 8 |
| சிதம்பரமான்மியம் | 0 | 3 |
| சிதம்பரமும்மணிக்கோவை | 0 | 3 |
| நித்தியகருமவிதி | 0 | 2 |
| நீதிநெறிவிளக்கம் மூலம் | 0 | 2 |
| நீதிநெறிவிளக்கம் உரையுடன் | 0 | 8 |
| திருக்குறள் மூலம் | 0 | 8 |
| திருக்குறள் சுருக்கம் | 0 | 5 |
| நால்வர்நான்மணிமாலை | 0 | 2 |
| அருணகிரியந்தாதி | 0 | 2 |

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரவர்கள்
வித்தியாநுபாலன அச்சகம்,
நெ. 300, தங்கசாலைத் தெரு, சென்னை-1.

FREE E-BOOK (www.thamizham.net) TM1201/2010